## சுருக்கம்

வேளாண்மைத்துறை -- தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு ஆ. பிரவீன், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) – கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – 04.04.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை (வே்நி9) துறை**

அரசாணை (3டி) எண் 114

நாள்: 15.05.2020
சார்வரி வருடம்,
வைகாசி திங்கள் 2,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண் 100, பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.

2. வேளாண்மை இயக்குநர் கடித் எண் அநிபி 3 / 128680 / 2019, நாள் 09.11.2019.

******

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருவாரூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் திருவாரூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடங்கு மேலாளர் (தரம்–1) ஆகப் பணிபுரிந்து வந்தபோது, 02.11.2009 அன்று பணிக்காலத்தில் காலமான அமரர் கு. ஆறுமுகம் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகன் திரு ஆ. பிரவீன் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களைப் பரிசீலித்து, வேளாண்மை இயக்குநர் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 161824 / 2017, நாள் 09.03.2018–ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக தற்காலிகமாக பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டதுடன், தனியருக்கு உரிய பணியிட ஆணை வழங்கும் பொருட்டு திருவாரூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து, திருவாரூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2 / 3050 / 2018, நாள் 28.03.2018ல் வழங்கப்பட்ட ஆணைப்படி, 04.04.2018 முற்பகல் கோட்டூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக தனியர் பணியில் சேர்ந்துள்ளார் என்றும், அன்னாரின் பணியினை 04.04.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுகிறது என ஆணையிடப்பட்டுள்ளது.

Scanned with CamScan

3. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்யப்பட்ட திரு ஆ. பிரவீன் என்பவரது பணியினை 04.04.2018 முற்பகல் முதல், தனியர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்யப்பட்ட அன்னாரின் பணி 04.04.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், தனியர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடைவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறையின் அ. சா. எண் 24973 / Q1 / 2019, நாள் 16.03.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாக சீர்த்திருத்தத்துறையின் அ. சா. எண் 10100 / ஜி2 / 2020, நாள் 19.03.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5 (இ).
திரு ஆ. பிரவீன், இளநிலை உதவியாளர் (பி.அ)
<u>வழி:</u> வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை–1), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வு தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை–9.

<u>நகல்</u>
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத்துறை, சென்னை–9.
தொடர்புடைய கோப்பு எண் 29692 / வேநி9 / 2019
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //**

வ. சசிகுமார் 18/5/2020
**பிரிவு அலுவலர்**

18/5/2020

Scanned with CamScanner